## ஞாலகுருவின் படைப்புக்கள்

# இன்றைய இந்துமத நிலை!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணைடையில் கோயில் கொண்டருளுபவர்)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,121 ஆனி மாதம்.**

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

காணிக்கை: ரூ 10/-

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

# <u>உள்ளுறை</u>

1. **“நாமக்கல் சேவா ஆசிரம நிறுவனருக்கு சித்தரடியான் வழங்கிய கருத்து விளக்கத் திருமடல்”** - 27/02/1986இல் சித்தரடியான் திரு சீ.மணி அவர்கள் குருதேவரின் திருவுளக் கருத்தின்படி எழுதிய மடல்.
2. **“நாமக்கல் சேவா ஆசிரம நிறுவனருக்காக சித்தரடியான் தந்த சிறப்பான விளக்கங்கள்”** - 04/03/1986இல் சித்தரடியான் திரு M.C.இராமன் அவர்கள் தொலைபேசி வாயிலாக அளித்த விளக்கங்களை குருதேவருக்கு எழுதி தெரியப்படுத்திய மடல்.
3. **“நாமக்கல் சேவா ஆசிரம நிறுவனர் குருதேவருக்கு எழுதிய மடல்”** - 05/03/1986இல் நாமக்கல் சேவா ஆசிரம நிறுவனர் திரு மாரப்ப கவுண்டர் அவர்கள் குருதேவருக்கு எழுதிய மடல்.
4. **“இன்றைய இந்துமத நிலை!”** - குருதேவர் அவர்களின் தலைமைப்பீட அடியான் திரு பெ.சௌந்தரராசன் அவர்கள் 08/03/1986இல் தலைமைப்பீடத்திலிருந்து நாமக்கல் திரு மாரப்ப கவுண்டருக்கு எழுதிய புரிமுக பதிலஞ்சல்.
5. **“தெய்வீக மருத்துவம்”** - 1969 மே மாதம் வெளியான “முதல் சித்தன்” என்ற இதழில் அச்சாகிய குருதேவர் அவர்களின் கட்டுரை ஒன்றின் சில பத்திகள்.

# நாமக்கல் சேவா ஆசிரம நிறுவனருக்கு சித்தரடியான் வழங்கிய

# கருத்து விளக்கத் திருமடல்

வேம்படிதாளம்,
27-2-86.

ஓம் எல்லாம் வல்ல எல்லாமாயுள்ள குருவே போற்றி!

பேரன்புக்கும், பெருமதிப்பிற்கும், இனிய கனிவுக்கும், மிகுந்த பணிவுக்கும், மிக்க அடக்கத்திற்கும், சிறந்த செயலுக்கும் உரிய உயரிய அருள்மிகு பெரியவர் (உயர்திரு V.மாரப்ப கவுண்டர், NRT, 19, பத்திரகாளி தெரு, S.P.புதூர், நாமக்கல் P.O., சேலம் Dt.) அவர்கள் சமூகத்திற்கு;

தங்களன்புள்ள எளியேன் அடியேன் அருள்மிகு வேம்படிதாளம் காமகோடி பீடாதிபதி, பெரியவாள், மகேசுவரி ஆச்சாரியார், குருவழி வாரிசு, கபாலீசுவரி சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி D.E.E., (2/24, புதிய வீதி, வேம்படிதாளம் P.O., சேலம் Dt. Pin: 637504) வரையும் **'கருத்து விளக்கத் திருமடல்'**.

(1) அனைத்தும் குருவின் செயலே.

(2) ஐயா! வணக்கம். நலம். நலமறிய ஆவல். தங்களுக்கு அருள்மிகு ஆத்தாள் தேவி காளி தேவி சித்தியாகிட வாழ்த்துகிறோம். குருவருளாலும், திருவருளாலும் தங்களுக்கு நன்மையே விளையும். கவலை வேண்டாம்.

(3) ஐயா! நாங்கள் கடந்த 21.2.86இல் அங்கு தங்களின் இல்லத்திற்கு வந்து சென்றது மிகவும் சிறப்புடைய ஒன்றாகும்.

தாங்கள் எங்களுக்கு வேண்டிய பணிவிடைகள் முகமகிழ்ச்சியோடும், உள்ளப் பூரிப்போடும் செய்தமைக்கு எங்களின் மனமார்ந்த நன்றியை நமது குருதேவர் அவர்களின் சார்பாகவும், நமது இயக்கத்தின் சார்பாகவும், இயக்கத்தில் உள்ள அனைத்து சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் சார்பாகவும் மீண்டும் நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

(4) ஐயா! குருவருளால் தாங்கள் பிறவாநிலைச் சித்தி அடையலாம். அறியவும்.

(5) ஐயா! இம்மண்ணுலகம் தோன்றுவதற்கு முன்பே விண்வெளியில் உள்ள பல உலகங்களில் வாழ்ந்து வரும் பதினெண்சித்தர்கள் ஆராய்ந்தறிந்து வகுத்திட்ட பகுத்தறிவு நிறை விஞ்ஞானமே சித்தர்நெறியெனும் இந்துமதம். இந்த உலகத்தில் முதன்முதலில் தண்ணீருக்குள்ளிருந்து வெளிப்பட்ட குமரிக் கண்டத்தில்தான் பதினெண்சித்தர்கள் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதர்களைத் தனித்துப் பிரித்து, வேறுபடுத்தி; பண்பாடும், நாகரீகமும் பெறுமாறு செய்தனர். இப்படி பதினெண்சித்தர்கள் மனித இனத்தைப் பண்படுத்தி நாகரீகப்படுத்தி, உயர்வுபடுத்தி, உய்வடையச் செய்வதற்குப் பயன்படுத்தியது அண்டப் பெருவெளியில் கணக்கற்ற கோடியாண்டுகள் வளர்க்கப்பட்ட சமுதாய அரசியல் விஞ்ஞானமான (Social and Political Science) இந்துமதமே ஆகும். இந்த இந்துமதத்தின் அனைத்து சாத்திற, தோத்திற, எந்திற, மந்திறக் கலைகளும், அறிவியல்களும், தத்துவங்களும் வெளியிடப்பட்டது பதினெண் சித்தர்களின் தாய்மொழியான தமிழிலேயே ஆகும்.

(6) ஐயா! இந்துமதத்தில் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் நாற்பத்தெட்டுப் பேர் தோன்றி வளர்ந்து நிறைந்து செயல்படுவதோடு; இம்மண்ணுலகப் பயிரின, உயிரின வாழ்வியல் வரலாறு நிறைவு பெறுகிறது என்று மிகத் தெளிவாகக் குறித்திருக்கிறார்கள். அத்துடன்

பதினெண்சித்தர் பீடாதிபதிகள் பதினெட்டாண்டுகள் செய்ய வேண்டிய பயிற்சிகளையும், பதினெட்டாண்டுகள் செய்ய வேண்டிய முயற்சிகளையும் மிகமிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. இத்துடன் இவர்கள் பதினெண்சித்தர் பீடாதிபதிகளாக வரக் கூடியவர்கள் சாதிப்பதற்குரிய, சாதித்தற்கரிய பெரிய, சீரிய, நேரிய திட்டங்கள் பலவற்றை வகுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இன்றைய பேரருள்மிகு அருட்கொடை வள்ளல், இந்துமதத் தந்தை, ஞானத் தந்தை, ஞாஞச்சாரியார், சிம்ம இராசியுடையார், எட்டாம் பிறப்பு, இராசிவட்ட நிறைவுடையார், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் தமது பயிற்சிகளையும், முயற்சிகளையும் முறையாக முடித்து நிறைவு செய்து இல்லறம் ஏற்கும் முன்னரே அனைத்து விதமான அத்திறங்களையும் பெற்றும், அரசயோகத்தைச் செய்து முடித்தும், பிறம்மயோகிகள் வரை முறையாக எல்லாவகையான யோகிகளையும், முனிவர்களையும், இருடிகளையும், தவசிகளையும், மறையோர்களையும், முறையோர்களையும், நெறியோர்களையும், வேதத்தோர்களையும், கணங்களையும், கணபாடிகளையும் .... உருவாக்கி அருளை அநுபவப் பொருளாக வழங்குவதில் மிகப் பெரிய சாதனைகளைச் சாதித்துள்ளார்.

இவரது கடலோடி, காடோடி, நாடோடி வாழ்க்கைகளும்; சுடுகாட்டு, இடுகாட்டு, புதைகாட்டு, நன்காட்டு, நடுக்காட்டு, மலைமுகட்டுப் பூசைகளும், தவங்களும்; நூறுயிரக்கணக்கான சித்தரடியான்களையும், சித்தரடியார்களையும், சித்தரடியாள்களையும்; சாதி மத மொழி இன நாட்டு வேறுபாடின்றி உருவாக்கித் தந்திருக்கின்றன. எனவேதான், இவர் உலகம் தழுவிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்குரிய சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்திற்குரிய உலக அருளாட்சியை உருவாக்கும் முயற்சியினைத் துவக்கியுள்ளார்.

இதற்காக காலத்தையும், இயற்கையையும் வென்று வாழும் பெரிய மகான்களும், ஞானிகளும், முனிவர்களும், இருடிகளும், தவசிகளும் தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பையும், ஆதரவையும், உதவியையும் நல்கி வருகிறுர்கள். ஆனுல், இவற்றிற்கெல்லாம் மேலாக அண்டபேரண்டங்களிலிருந்து சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் பெற்று அருளாட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபடும் நாட்டம் கொண்டே செயல்பட்டிட்டார் நமது குருதேவர்.

(7) ஐயா! பொருளுலக இருள்கள், இன்னல்கள், சுரண்டல்கள், கொள்ளைகள், சர்வாதிகார வர்க்க மடமைகள், ஏக்கங்கள், தேக்கங்கள், தூக்கங்கள், ஏமாற்றுக்கள், பற்ருக்குறைகள், வறுமைகள், தவறுகள், ... அனைத்தும் அருளுலகச் சாதனைகளால்தான் அகற்ற முடியும். அனைத்தையும் அன்பு வழியில், அற வழியில், அமைதி வழியில், சமாதான வழியில், மென்மை வழியில் இறை அருளால்தான் சாதிக்க முடியும் ... என்பதற்காக இரவுபகலாக நூற்றுக்கணக்கில் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் உருவாக்கப் பட்டு செயல்பட்டு வருகிறுர்கள். மக்களின் வாழ்வியல் கோளாறுகளான விதி, ஊழ்வினை, சாபம், கண்ணேறு, பேய்கள், பிசாசுகள், ஆவிகள், தெய்வக் கோளாறுகள், நாள் கோள் நட்சத்திரப் பாதிப்புக்கள் ... மந்திறவாதிகளின் தாக்குதல்களான ஏவல், பில்லி, சூனியம், வைப்பு, கழிப்பு, காற்று, மருந்து, மந்தரம், மாந்தரம், மாந்தரீகம் ... முதலிய பாதிப்புகளிலிருந்து விடுவிக்கப்படுவதற்காக ஆங்காங்கே அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ஓமங்கள், ஓகங்கள், யாகங்கள், யக்ஞங்கள், வேள்விகள், தவங்கள், ... நிகழ்த்தப்பட்டு மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், அருள்வாக்குகள், அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாசகங்கள், திருவாக்குகள், திருவாசகங்கள், கருவாக்குகள், கருவாசகங்கள் ... முதலியன ஓதப்பட்டு மக்களுக்கு அநுபவப் பொருளாக அருளை வழங்கி நலம் விளைவிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

(8) ஐயா! சித்தர்களின் அருட்கொடையான மந்திறங்கள், எந்திறங்கள், பூசாவிதிகள், நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், தவ வழிகள், வேள்வி வழிகள், ஞான வழிகள், சித்தி வழிகள், கடவுட் கலைகள், தெய்வீகக் கலைகள், பேய்க் கலைகள், நோய்க் கலைகள், தேய் கலைகள், 64 ஆய கலைகள், 48 அருட் கலைகள், 96 தோத்திற, சாத்திறங்கள் ஆகியவைகளெல்லாம் விரும்பியவர்களுக்கு முறைப்படி குருகுலத்தில் கற்றுத் தரப்படுகிறது. சித்தர்களின் அருட்கொடைகளையெல்லாம் வழங்கக் கூடிய பேரருள் வள்ளலாக பேரருள்மிகு இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், இராசிவட்ட நிறைவுடையார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் நமது குருதேவர் அவர்கள் தமது பயிற்சிக்குரிய 18 ஆண்டுகளையும், முயற்சிக்குரிய 18 ஆண்டுகளையும் பயன்படுத்தியே உலகெங்கும் உள்ள எல்லா அருட்கலைக் கழகங்களையும் தொடர்புபடுத்தி ஓர் அரிய இணைப்புச் செயல்நிலையை உருவாக்கியிருக்கிறார்.

(9) ஐயா! எனவேதான் நமது குருதேவர் அவர்கள் இவரது முன்னோர் தாய்வழித் தாத்தா கண்டப்பக் கோட்டையார் என்றும், சித்தர் ஏளனம்பட்டியார் என்றும் அழைக்கப்படும் உ.இராமசாமிப் பிள்ளை கி.பி.1772இல் உலகம் முழுவதும் உள்ள மதவாதிகளை மறுமலர்ச்சி பெறச் செய்வதற்காக உயிரணுவைக் குறிக்கும் சொல்லான இந்து என்ற சொல்லைப் பயன்படுத்தி உருவாக்கிய **"இந்து மறுமலர்ச்சி இயக்கம்"** என்ற அமைப்பை இன்றைய உலகியலுக்கும், அடியான்கள் அடியாள்கள் அடியார்கள் விருப்பத்திற்கும் ஏற்ப அரசியல் சட்டதிட்டக் கட்டுப்பாட்டு நிர்ணயங்களுக்குட்பட்ட ஓர் அமைப்பாகப் பதிவு செய்துள்ளார். இந்தச் சங்கம் பல கழகங்களின் சங்கமமாகும். இது சமய, சமுதாய, பண்பாட்டுக் காப்பகமாக, கருவூலமாக, வளர்ச்சிப் பண்ணையாக இருக்கும். இந்த இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலமாக உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கழகங்களையும், உலக மத ஒற்றுமைக் கழகங்களையும், உலக அருளாளர் கழகங்களையும்,

<u>இந்தியத் தத்துவக் கழகங்களையும், இந்தியச் சித்தாந்தக் கழகங்களையும், இந்தியப் பண்பாட்டுக் கழகங்களையும், சித்தர் அருளியல் கலைக் கழகங்களையும், சித்தர் பொருளியல் கலைக் கழகங்களையும், சித்தர் பேரியல் கலைக் கழகங்களையும்</u> உருவாக்கி மனித இனத்தைப் புனிதப்படுத்தும் பணி தொடங்கப்பட்டு விட்டது.

(10) ஐயா! இத்துடன் விரிவஞ்சி போதிய நேரம் இன்மையால் நிறைவு செய்கிறோம்.

<u>குறிப்பு</u>:-

(அ) ஐயா! தங்களைப் பற்றி குருதேவர் அவர்களுக்குத் தெரியப் படுத்தியுள்ளோம். தாங்களும் குருதேவர் அவர்களுடன் தொடர்பு கொண்டு இப்பிறவி நிலைப் பயனையடைக.

(ஆ) ஐயா! தாங்கள் அருள் ஞானத்தில் ஒரு பழுத்த ஞானியாவீர். தங்களின் ஒத்துழைப்பும், பேராதரவும் இவ்வுலக மக்களுக்குத் தேவை. தாங்கள் மக்களுக்குப் பயன்படாது போய்விடக் கூடாது என்றஞ்சுகின்றோம். “தனி மரம் தோப்பாகாது” என்ற சித்தர் நெறி வாசகத்தையே இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

(இ) ஐயா! தாங்கள் காலந் தாழ்ந்தே நமது குருதேவருடன் அறிமுகமாகி உள்ளீர்கள். இருந்தாலும் இப்பொழுதாவது வந்து சேர்ந்துள்ளீர்களே என்று மகிழ்கிறோம். தாங்கள் குருதேவருடன் இணைந்து செயல்பட்டால் இன்னும் 6 மாத காலத்திலேயே தங்களின் செயல்கள் தங்களின் மன நிறைவாக அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயனுள்ளதாகவும், உகந்ததாகவும், சிறப்பாக அமையும். தங்களின் குடும்பத்தாரும் இன்று போல் என்றென்றும் வாழையடி வாழையாக, பரம்பரையாக தங்களைப் பயன்படுத்தி அருள்நிலைகளைப் பெறலாம். தாங்கள் சித்தர் நெறிச் செல்வராக உடனடியாகச் சேர்ந்து அனைத்து

நன்மைகளையும், சிறப்புக்களையும் குருவருளால் பெறுக! எனக் குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

(ஈ) ஐயா! மேற்குறிப்பிட்ட கருத்துக்களைத்தான் தங்களுக்கு விளக்க நாங்கள் வந்தோம். தாங்களே தொடர்ந்து இரண்டு மணி நேரம் பேசியதால் சில கருத்துக்கள் மட்டுமே கூற முடிந்தது. அறியவும். இத்துடன் இதுவரை அச்சடிக்கப்பட்ட அறிக்கைகள் தங்களுக்கு இணைத்து அனுப்புகிறோம்.

உடன் பதில் வரைக.

குருவின் திருவடிகளே சரணம்!
அன்பே சிவம்!
ஓம் திருச்சிற்றம்பலம்!

**தங்களன்புள்ள**
**சீ.மணி D.E.E.**

**//உண்மை நகல்//**

நகலெடுத்தவர்:-

அருள்மிகு தேவதானப்பட்டி தேவி காமாட்சியம்மன் சன்னிதானம் சித்தரடியான், சித்தர் மகன், சிவயோகி, வெ.செகதீசன், 1, சிசுட்டர் ரோசு வீதி, மதுரை-625010.

**//மூல நகல்: சித்தரடியான் திரு வெ.செகதீசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நாமக்கல் சேவா ஆசிரம நிறுவனருக்காக சித்தரடியான் தந்த சிறப்பான விளக்கங்கள்

ஓம்

குருவே துணை

D.R.R. No./R/057

4-3-86,

MADURAI-10.

அன்பு குவலய குருகுலபீடம், இந்துமதத் தந்தை, ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் சமூகத்திற்கு, அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் M.C.ராமன் பணிவுடன் எழுதும் அஞ்சல்.

(1) குருவருளாலும், திருவருளாலும், தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளாலும் அடியவனும், துணைவியும், குழந்தைகளும் நலமாக இருக்கிறோம். நன்றி.

(2) அன்பு அய்யா! 3.3.86 திங்கள் 11 to 1½ மணியளவில் சாரதா இல்லத்தில் அடியவனும் போகர் சன்னிதானம் N.தயாளனும் கலசம் சிங்காரித்து தங்களுடைய சூலாயுதத்திற்கு அருகிலேயே வைத்து தியானத்தில் அமர்ந்து குருதேவரோடு தொடர்பு கொண்டு குருவாணை பெற்று சாரதாவையும், குழந்தை அபர்ணாவையும் மந்திரித்து விட்டு வந்தோம்.

(3) தாங்கள் அடியவனுக்கு நேரில் சொன்ன செய்திகளின் படி அனைவருக்கும் கூறிவிட்டேன். சேலம் சீ.மணி, வெங்கடேசன், சீனிவாசன் குடும்பத்தார்க்கும் அஞ்சல்கள் அனுப்பி விட்டேன். பெங்களூர் வெங்கட்டரமணனிடமிருந்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை.

(4) திரு M.S.R.மாரியப்பன் அவர்களின் மகள் மகேசுவரிக்கு எந்தவிதமான கனவுகளும் தோன்றவில்லை என்று சொன்னார். அவர் 2.3.86 ஞாயிறு குருகுலம் சென்று வீ.மா.ச.விடம் அனைத்துச் செய்திகளையும் சொல்லியிருக்கிறார். 3.3.86 திங்கள் இவருடைய இல்லம் சென்று வந்தேன். இவரும் இவர் துணைவியாரையும் தவிர இவர் மகள்கள், மகன் ஆகியவர்கள் அருளற்று சோர்வுடனும், மந்தமாகவும் இருந்தார்கள். வருகிற வியாழன் தத்தனேரியில் குடும்பப் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளும்படி சொல்லிவிட்டு வந்தேன்.

(5) அன்பு அய்யா! திரு T.பொன்னுசாமி TRUNK SUPERVISOR நாமக்கல் அவர்கள் 1-3-86 மாலையும், 2-3-86 ஞாயிறு இரவும் அடியவனோடு தொலைபேசியில் பேசினார். அதன் விவரம்:

(அ) தாங்கள் அவருக்கு 100 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களையும், அறிக்கைகளையும் அனுப்புவதாக எழுதியிருந்ததற்கு அவர் எனக்கு வேண்டாம். நான் அனைத்தையும் முசிறி பன்னீர்செல்வத்திடம் பெற்று படித்து முடித்து விட்டேன். தவிரவும் அறிக்கைகளையும், புத்தகங்களையும் மக்களுக்குப் படிக்கக் கொடுத்து ஒன்றும் ஆகப் போவதில்லை. இது போன்று பல நூல்கள் மகரிசிகளாலும், அருளாளர்களாலும் நாமக்கல் முழுவதும் வழங்கப்பட்டுள்ளது. இதனால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. ஆனால், எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. நான் வாங்கி வைத்துக் கொள்கிறேன் என்றார். மற்றும்,

(ஆ) குருதேவர் நாமக்கல் வருகை தரும்போது நூறு பேர்களைத் தயார் செய்து வைத்திருப்பேன். இந்த நூறு பேர் கேட்கின்ற அனைத்து வகையான கேள்விகளுக்கும் குருதேவர் பதில் சொல்ல வேண்டும்.

(இ) அருள்வாக்குச் சொன்னால் சாதாரணமான குறிகாரர்கள், கோடங்கி, கிளி சோதிடம் போன்று சொல்லக் கூடாது. மிகத் தெளிவாக மூன்று காலங்களைப் பற்றியும் சொல்ல வேண்டும்.

(ஈ) பொன்னுசாமியிடம் மாரப்ப கவுண்டர் சொன்னுர்கள். குருதேவர் வந்தால் பிருமணர்களைப் பற்றி எதுவும் பேசக் கூடாது. பலி கொடுத்துப் பூசை செய்வதைப் பற்றி வலியுறுத்தக் கூடாது. தந்தை ஈ.வெ.ரா. பெரியாரைப் பற்றியும் பேசக் கூடாது. நான் எவ்வளவு பேர் வந்தாலும் உணவு தருகிறேன். சொற்பொழிவுக்காக வேறு எதுவும் என்னிடம் எதிர்பார்க்க வேண்டாம் என்று கூறியுள்ளார்.

(உ) மேற்படி தீர்மானங்கள் அனைத்துக்கும் உடன்பட்டால்தான் நாமக்கல்லில் இ.ம.இ. நிலைக்கும். நாமக்கல்லை சாதாரணமாக எண்ணி விட வேண்டாம் என்று கூறினுர்.

(ஊ) அன்பு அய்யா! திரு பொன்னுசாமியுடைய மேற்படி தீர்மானங்களுக்கு அடியவன் பதிலளித்தேன். ஆத்திரப்பட்டோ, அவசரப்பட்டோ, நிதானமிழந்தோ பேசவில்லை. பொறுமையாக, நிதானமாக; ஆனுல் தெளிவாகவும், உறுதியாகவும் பேசினேன்.

(எ) நூறு ரூபாய் பெறுமானமுள்ள நூல்கள் நீங்கள் மட்டும் படிப்பதற்காக அல்ல. நீங்கள் சொல்லுகிற அந்த நூறு பேரும் அதைப் படித்துப் பார்த்து ஆராயட்டும். அவர்களிடம் சிறுதொகையைப் பெற்றுக் கொண்டு அவைகளைத் தரலாம். வசதிவாய்ப்புப் போல நீங்கள் குருதேவருக்குப் பணம் அனுப்பலாம். நாங்கள் யாரையும் கசக்கிப் பிழிவதில்லை. **பொருளுக்காக எம்முடைய குருதேவர் அருளை விற்பவரல்ல**. அந்த அறிக்கைகள், நூல்கள் அனைத்தும் குருதேவரும் அடியான்களும் ஊதியத்தில் அச்சிட்டவையே தவிர; யாரும் எங்களுக்கு உதவித் தொகை கொடுத்து அச்சிட்டவை அல்ல. மற்றும் **மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று கொண்டவர்கள் மட்டுமே இந்த நூல்களை படித்து ஆராய்ந்தறிந்து உண்மைகளையறிந்து கொள்வார்கள்**. கதை படிப்பதைப் போல் படிப்பதற்கல்ல. மொழி, இனம், நாடு, மதம் வேறுபாடின்றி அனைவரும் கற்றறியும் வகையில்

எம் குருதேவரால் எழுதப்பட்டவைகள்தான் இந்த வரலாறுகள் அனைத்தும். இதைத் தாங்கள் உணர வேண்டும்.

(ஏ) குருதேவர் நாமக்கல் வருகையின் போது தாங்கள் தயாரித்துள்ள நூறு பேர்கள் கேட்கும் கேள்விகளுக்கு குருதேவர் பதிலளிக்க வேண்டும் என்கிறீர்கள். இதற்கு குருதேவர் வேண்டாம். இந்த நூறு பேர் இல்லை, உலக மக்கள் அனைவரும் கேட்டாலும் சரி, தெளிவாக இன்றைய சூழ்நிலைக்கேற்ப விஞ்ஞான ரீதியில் எளிமையாக உதாரணங்களோடு பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் கல்வியறிவே இல்லாத அடியவனால் கூட பதில் அளிக்க முடியும். அதைப் பற்றிக் கவலை வேண்டாம். மற்றும் தாங்கள் சொல்லுகிற இந்த நூறு பேரும் செல்வந்தர்கள். குருதேவரை ஆடம்பரமாக வரவேற்க வேண்டும் என்ற ஆர்வத்தால் இவர்களைத் தேடுகிறீர்கள். ஆடம்பரத்தையோ, புகழையோ விரும்பாதவர் எம் குருதேவர். இவர்களை விட அடுத்த வேளை சோற்றுக்காக ஏங்கும் பத்து ஏழை எளிய மக்களைத் தேடுங்கள்.

அதே நேரத்தில் பெரிய பெரிய கோயில்களோ, ஆசிரமங்களோ, பல ஏக்கர் நிலங்களோ தேவையில்லை. மாறாக பாழடைந்த கோயில், கருவறைகள், இன்று மக்களுக்கு கழிப்பிடமாக இருக்கின்ற வெட்டவெளி போன்ற இடத்தைத் தேடுங்கள். அங்கே ஒரு சிறு யாககுண்டத்தை அமைத்து மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றி மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக நாங்கள் வழங்குகிறோம். அவர்களையே அருளாளர்களாக ஆக்குகிறோம். இதைத்தான் நாங்கள் தமிழகம் முழுவதும் செய்து வருகிறோம். சித்தர் நெறியெனும் இந்துமத புத்தகத்தை உங்களுக்கும் கொடுத்திருக்கிறோம். நீங்கள் மேல் அட்டையை மட்டும்தான் பார்த்திருக்கிறீர்கள். இன்னும் திறந்து கூடப் பார்க்கவில்லை. கடலின் மேல்மட்டத்தைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆர்வமிகுதியால் அவசரப்பட வேண்டாம். படிப்படியாக செய்வோம் என்றேன்.

(ஐ) அருள்வாக்கைப் பற்றிக் கேட்கிறீர்கள். முக்காலத்தைப் பற்றியும் கணிக்க முடியும். கடந்த விஞடி என்ன நடந்தது, அடுத்த விஞடி என்ன நடக்கும் என்பதையும் கூற முடியும். கேட்க ஆச்சரியமாகவும், ஆனந்தமாகவும் இருக்கும். ஆஞல், அது தேவையற்ற ஒன்று. இப்போது என்ன நோய்? எப்படி ஏற்பட்டது? அதற்கு மருந்தென்ன? இவ்வளவுதான் தேவை. அதை விடுத்து அணு அணுவாக அருள்வாக்குக் கூறியும், சித்து விளேயாடல்கள் செய்து காட்டியும் மக்களேக் கவருகின்ற அவசியம் இல்லே. அது தவறும் கூட.

(ஒ) மாரப்ப கவுண்டர் தீர்மானப்படி பிருமணர்களேப் பற்றிப் பேசக் கூடாது, ஈ.வெ.ரா. பெரியாரைப் பற்றிப் பேசக் கூடாது, பலி கொடுத்துப் பூசை செய்வதை வற்புறுத்தக் கூடாது என்ருல் ஒரு தனிமனிதனுடைய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதல்ல இந்த இயக்கம். மாரப்ப கவுண்டர் இந்த உலகத்தைப் படைத்தவரும் அல்ல; அவர் இலட்சக் கணக்கில் பொருளுதவி செய்தாலும் அது எங்களுக்குத் தேவையுமல்ல. நாங்கள் பல ஊர்களில் பட்டினி கிடந்து வந்திருக்கிருேம். நாங்கள் அனேவரும் சம்பாதிக்கிறவர்கள்தான். எங்கள் உணவுக்காக நாங்கள் பணம் கொண்டு வருவோம். எங்களுக்கு ஆடம்பரமான அரசியல் மேடைகள் தேவையில்லே. மரத்தடியும், ஒலிபெருக்கியும் போதும்.

இவருடைய செல்வாக்கு இருந்தால்தான் நாமக்கல்லில் இ.ம.இ. வளர முடியும் என்ருல் அப்படிப்பட்ட நாமக்கல் எங்களுக்குத் தேவையும் இல்லே. உலகோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாமக்கல்லில் ஒரு துரும்புக்குச் சமம் ஆன 78 வயது நிரம்பி, மிகுந்த அநுபவங்களேப் பெற்று தேசத் தொண்டு செய்து காலத்தைக் கடத்திட்ட மாரப்ப கவுண்டர் *பொய்யான ஹிந்துமதத்தில்* ஊறிப் போய் இருக்கிருர். எங்களே அவர் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லே. அவரை விட்டு விடுங்கள் என்றேன்.

(6) அன்பு அய்யா! பொன்னுசாமி இதைக் கேட்டபிறகு தெளிவடைந்து நான் குருதேவரை எப்படியாவது நாமக்கல்லுக்கு வரவழைக்க வேண்டுமென்று தினமும் பேயாக அலேகிறேன். அவரை எப்படியாவது நான் சந்தித்து என் குருதேவர் காலில் விழுந்து ஆசி பெற வேண்டும். இல்லேயென்ருல் நான் சென்னேக்கே சென்று விடுவேன். நேற்று கூட DIGஐச் சந்தித்து குருதேவர் அறிக்கை கொடுத்து சித்தர் நம் ஊருக்கு வரப் போகிருர் என்றேன். அன்புடன் பெற்றுக் கொண்டார். பொருளுதவிக்காகத்தான் நான் பணக்காரர்களேத் தேடினேன் என்ருல் அவசரப்பட வேண்டாம். முதலில் நாம் அ.வி.தி. பணி செய்வோம். தங்கள் செல்வாக்கால் நாமக்கல்லில் நிறைய இடங்களில் மெய்ஞ்ஞானக் கொடியேற்றி மக்களுக்கு அருள் வழங்கிய பின்பு குருதேவரை வரவழைப்போம் என்று கூறினேன். இத்துடன் இவ்வஞ்சலே நிறைவு செய்கிறேன்.

அன்பு அடியான்

**தாயுமானவர் சன்னிதானம்**

**M.C.இராமன்,**

மதுரை - 625010.

<u>நகல் தயாரித்தவர்</u>:-

அன்பு / அருள்மிகு சமயபுரத்து மாரியம்மன் சன்னிதானம்
M.R.சீனிவாசன் R.M.P., 90, தென்கள்ளர் தெரு,
முசிறி P.O., திருச்சி Dt. - 621411. 15-3-1986.

**//உண்மை நகல்//**
**//மூல நகல்: முசிறிச் சித்தரடியார் திரு M.R. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நாமக்கல் சேவா ஆசிரம நிறுவனர் குருதேவருக்கு எழுதிய மடல்

சேவா இல்லம், நாமக்கல்.
ஸ்தாபகர்: V.மாரப்பன் (N.R.T.) நாமக்கல்.
5-3-86.

அன்பிற்குரிய உயர்திரு ஞாலகுரு, ஞானகுரு, 12வது பதினெண்சித்தர் கருவூரர் அவர்களுக்கு V.மாரப்ப கவுண்டர் (NRT) சேவா ஆசிரம ஸ்தாபகர் சிரம் தாழ்த்தி வணங்கி வரையும் மடல்.

தங்களின் மடல் கிடைக்கப் பெற்று மிகவும் மகிழ்ந்தேன். முன்கூட்டியே எனது ஊர் சித்தரடியார் T.பொன்னுசாமி அவர்கள் மூலம் சில சித்தரடியார்கள் எனது இல்லத்திற்கு வந்து தங்களின் இ.ம.இ. கொள்கைகளேயும், செயல்திட்டங்களேயும் விளக்கினுர்கள். அதன்மூலம் எனக்கு இந்து மத மறுமலர்ச்சியின் பணியில் திருப்தி ஏற்பட்டது. தவிர சித்தரடியார் பொன்னுசாமி அவர்கள் எனது சேவா ஆசிரமத்தில் ஒரு நாள் தங்கி அங்கு சிலவற்றை தொடர்ந்து செய்ய மக்களுக்கு உதவ சில வழிமுறைகளேயும் கூறினுர்கள்.

இந்து மதம் உலக மதங்களுக்கெல்லாம் தாய் மதம் என்ற தங்களின் கருத்து சரியானதாகும். இந்து மத அடிப்படையைக் கொண்டுதான் மற்ற மதங்கள் யாவும் உள்ளன என்பது தெளிவு.

எனினும் பெரும்பகுதி உலக மனிதர்களிடத்தில் கிறித்துவ மதம், இஸ்லாம் மதம் பரவியுள்ளது போல; அம்மத கட்டுப்பாட்டில்

காணும் தெளிவு போன்று இந்துமதத்தில் காண, புரிய இந்து மத கர்த்தாக்கள் போதிய அளவு இயலவில்லை என்றாலும்; இந்து மதத்தை, அதன் அடிப்படை தத்துவத்தை எந்த முயற்சியாலும் அழித்து விட முடியவில்லை. இந்து மதம் சகிப்புத் தன்மையுடையது மற்றுமன்று [மட்டுமன்று]; மற்ற மதங்களில் காணும் உண்மை, புதுமைகளையெல்லாம் ஏற்கும் மதமாக, கடலாக இந்துமதம் உள்ளது. இதனால்தான் மற்ற மதங்கள், பிற மக்களை, மொழிகளை வேறுபடுத்திப் பார்க்காமல் அணைத்துக் கொள்ளும் மதமாக; பழைய புதிய கருத்துக்களை காலத்திற்கேற்ப ஏற்கும் மதமாக உள்ளது இந்துமதம்.

இந்துமதம் பல லட்ச ஆண்டு வளர்ச்சிகளில் அதன் அடிப்படைத் தத்துவம் (அதாவது சித்தர்களின் தத்துவம்) மாறவில்லையாயினும் அவற்றைப் பயன்படுத்தும் நிலையில் நாளடைவில் மூடப் பழக்க வழக்கங்கள் புகுந்துள்ளன. அவற்றை இந்து மறுமலர்ச்சி இயக்கம் அகற்றவும், உண்மையை வெளிக் கொணரவும் செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது ஆகும்.

இந்நிலைக்கு குறுக்கே நிற்பவர்களை அமைதியாக அன்பாக அகற்றி இந்து மத தத்துவங்களை (அதாவது சித்தர்களின் தத்துவங்களை) விஞ்ஞான முறையில் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டை புகுத்த முயல வேண்டும். எந்த இனத்தையும், மதத்தையும், மொழிகளையும் புறக்கணிக்காமல் அவற்றிலுள்ள உண்மை தத்துவங்களை ஏற்க வேண்டியதும் அவசியமாகும்.

பல மொழிகளை தன்னகத்துள் கொண்டுள்ள நமது பாரதநாடு ஒருமைப்பாட்டை முதன்மையாக ஏற்றுக் கொண்டுள்ளதால் அந்நிலையில் தமிழ் மொழியை வளர்ப்பதும் அதிலுள்ள மந்திர தந்திர இதிகாச உண்மைகளையும் மனோ தத்துவங்களையும் போதிப்பது அவசியமாகும். ஆயினும் தமிழ் மொழி மட்டும் இந்தியாவை ஆண்டு விட

முடியாது என்ற கண்ணோட்டத்தில் செயல்பட வேண்டும் என்பது எனது எண்ணம்.

தங்களைப் போன்ற பெருமகான்களின் கீழ் கல்வி கற்றவர்கள், மூடப் பழக்கவழக்கங்களை ஒழிக்க கூடியவர்கள், இந்து மத மறுமலர்ச்சியை குருதேவராகிய தங்களின் காலத்தில் புதுமையாக்கக் கூடிய சித்தரடியார்களையும், தங்களையும் வணங்கி வரவேற்கிறேன்.

இப்படிக்கு

அன்புள்ள

(ஒப்பம்) **V.மாரப்ப கவுண்டர்.**

சித்தரடியான் சீ.மணி அவர்களின் கொள்கை விளக்க கடிதத்திற்கு நன்றி தெரிவித்து இக்கடித நகல் அனுப்பப்படுகிறது.

**//உண்மை நகல்//**
**//மூல நகல்: நாமக்கல் சித்தரடியான் திரு T.பொன்னுசாமி அவர்களின் கையெழுத்தில் இருந்த அஞ்சல் நகலில் இறுதியில் திரு மாரப்ப கவுண்டர் அவர்களின் கையெழுத்து இருந்தது.//**

# இன்றைய இந்துமத நிலை!

ஓம்

பொன்னேரி,
8.3.86.

To

V. மாரப்ப கவுண்டர், லட்சுமி இல்லம், 19, பத்திரகாளி தெரு, ச.பெ.புதூர், நாமக்கல், சேலம் மாவட்டம்.

1) பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய V.மாரப்பன் N.R.T. (ஸ்தாபகர், சேவா இல்லம், நாமக்கல்) அவர்கள் சமூகத்திற்கு இன்றைய திருவோலை நாயகங்களுள் ஒருவனாக உள்ள சித்தரடியான் அருள்மிகு தொட்டியம் மருதக்காளி சன்னிதானம் பெ.சௌந்தரராசன் B.E., எங்களது குருதேவரின் திருவோலக்கத்தைத் தெரிந்து எழுதும் **புரிமுக பதிலஞ்சல்**. அதாவது, தாங்கள் 5.3.86 தேதியிட்ட அஞ்சலொன்று அனுப்பியதனை குருதேவருக்கு நேற்று 7.3.86 நள்ளிரவில் படித்துக் காட்டி அவரது திருவுள ஒப்புதலைத் தெரிந்து யாம் எழுதும் மடலே இது.

எம்மைப்போல் குருதேவர் அருகில் அவ்வப்போது அவரைக் காண வருகின்றவர்கள் ஓலைநாயகமாக இருந்து அஞ்சல் எழுதுவதுதான் மரபு. எனவே, சென்னையிலிருந்தும், சென்னை வட்டாரத்திலிருந்து யார் அஞ்சல் எழுதினாலும் அது குருதேவரின் பதிலாக மதிக்கப்பட வேண்டும், ஏற்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களோடு தொடர்பு கொள்ளுகின்ற அனைவருக்கும் விதிக்கின்ற சட்டமாகும். எனவே, குருதேவரே நேரடியாக அஞ்சல் எழுதவில்லையென்று யாரும் வருத்தப்படவோ, கோபப்படவோ முற்படக் கூடாது! கூடாது! கூடாது! ஏனெனில் அன்றுடம் குருதேவருக்கு 20 முதல் 40

பெரிய அஞ்சல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அனைத்துக்கும் அவரே பதில் எழுதுவதென்பது இயலாது.

மேலும், **மெய்யான இந்துமத**த்திற்கும், *பொய்யான ஹிந்துமதத்*திற்கும் உள்ள வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் விளக்கி நிலைநிறுத்த வேண்டிய பணிகளில் அதிகக் கவனம் செலுத்துபவராக உள்ளார் எங்களது குருதேவர். (... More attentions are given to establish clearly the differences and contradictions between The INDUISM and The PSEUDO HINDUISM...) இதற்காக கட்டுரைகள் எழுதுவது, அருளுரைகள், அறிவுரைகள் வழங்குவது குருதேவரின் அதிக நேரத்தை எடுத்துக் கொள்கின்றன. மேலும், அருளூற்றுக்களாக ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகச் சக்கரங்களும், நலிவு மெலிவு பாதிப்பு நீக்க பூசனைப் பொருள்கள் முதலியவை தயாரிப்பவராகவும் இருக்கிறார் குருதேவர்.

2) தங்களுடைய அஞ்சலில், "... பலமொழிகளைத் தன்னகத்துள் கொண்டுள்ள நமது பாரதநாடு ஒருமைப்பாட்டை முதன்மையாக ஏற்றுக் கொண்ட நாடு. இந்நிலையில் தமிழ்மொழியை வளர்ப்பதும், அதிலுள்ள மந்திர தந்திர இதிகாச உண்மைகளையும், மனோதத்துவங்களையும் போதிப்பதும் அவசியமாகும். ஆயினும் தமிழ்மொழி மட்டும் இந்தியாவை ஆண்டுவிட முடியாது என்ற கண்ணோட்டத்தில் செயல்பட வேண்டும் என்பது எனது எண்ணம்..." என்ற தங்களுடைய வாசகங்களைப் படித்தவுடனேயே தாங்கள் உண்மையிலேயே ஒரு பேரருளாளர், பெரியவர் என்பதைப் புரிந்து கொண்டேன். ஏனென்றால், ஆங்கிலத்தில் 'The great men think alike' என்பார்கள். இதற்கேற்பத்தான் தாங்கள் நமது ஆன்றோர்களையும், சான்றோர்களையும் போல சிந்தித்திருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால், தங்களின் மேற்படி கருத்து வாசகம் தாங்கள் தங்களையறியாமலேயே ஒரு சித்தரடியாராக மாறியிருக்கிறீர்கள் என்பதை

விளக்கியிருக்கிறது. ஏனென்றால் இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதன்கீழுள்ள 12க்கும் மேற்பட்ட அமைப்புக்களும் பதினெண் சித்தர்களின் சித்தர்நெறியெனும் **மெய்யான இந்துமத**த்தின் அடிப்படையில்தான் இயங்குகின்றன.

இவற்றின் அடிப்படையே ‘அனைத்து மொழிகளுக்கும் சமமான உரிமையும், பெருமையும், விடுதலையும் வழங்கப்பட்டேயாக வேண்டும்’ என்பதுதான். இதனுடைய விளக்கமாகத்தான் 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் இம்மண்ணுலகில் தோன்றிட்ட மணீசர்களுக்கு (மண் + ஈசர் = மணீசர், மண்ணின் தலைவர், மண்ணில் தோன்றிட்ட உயிரினங்களில் மேம்பட்டவர்கள்.) இந்துமதத்தை வழங்கப் பதினெண்சித்தர்கள் பயன்படுத்திய அவர்களின் தாய்மொழியான அண்டபேரண்டங்களை ஆளும் அமுதத் தமிழ்மொழியே இம்மண்ணுலக அனைத்து மொழிகளுக்கும் தாய். அதாவது, இம்மண்ணுலகில் பிறந்த அனைத்து மொழிகளும் ஒரே தாய் வயிற்றில் பிறந்த உடன்பிறப்புக்களாகும் (சகோதரர்கள்). எனவே, அனைத்து மொழிகளும் ஒன்றுக்கொன்று சமமானவைதான்; எந்த மொழியும் வேறு எந்த மொழியையும் விட உயர்ந்ததுமில்லை, தாழ்ந்ததுமில்லை. அதனால், அனைத்து மொழிகளுக்கும் தாயான தமிழ்மொழிக்குள்ள அருளாற்றல் (The Divine Power), தெய்வீகத் தன்மை (The Mystical Nature) அனைத்து மொழிகளுக்கும் உண்டு! உண்டு! உண்டு! அதனால், அவரவருடைய தாய்மொழியிலேயே அனைத்து விதமானப் பூசைகளையும் செய்து எல்லாவிதமான பத்திநிலைகளையும், சத்திநிலைகளையும், சித்திநிலைகளையும், முத்திநிலைகளையும் அடையலாம், அடையலாம், அடையலாம் என்று கூறுவதுதான் **மெய்யான இந்துமதம்**.

இந்த **மெய்யான இந்துமத**த்திற்கு குவலய குருபீடமாக, அருளாட்சி நாயகமாக, ஞாலச்சாரியாராக, ஞானத்தந்தையாக, குருதேவராக, மூலப்பண்டாரமாக, தலைமைச் சன்னிதானமாக, தலைவராக விளங்குகின்ற

தலைவர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களிடம் மொழிவெறியோ! சாதிவெறியோ! வட்டாரவெறியோ! இனவெறியோ! நாட்டுவெறியோ! மதவெறியோ! இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை. எனவே, தங்களை எங்களுடைய இயக்கத்தின் தளபதிகளுள் ஒருவராக பேருவகையோடு ஏற்கிறோம், ஏற்கிறோம், ஏற்கிறோம். இந்த அறிவிப்பினைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

3) ஐயா! தாங்கள் தங்களுடைய அஞ்சலில் "... இந்நிலைக்குக் குறுக்கே நிற்பவர்களை அமைதியாக, அன்பாக அகற்றி இந்துமதத் தத்துவங்களை (அதாவது சித்தர்களின் தத்துவங்களை) விஞ்ஞான முறையில் அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டைப் புகுத்த முயலவேண்டும். எந்த இனத்தையும், மதத்தையும், மொழிகளையும் புறக்கணிக்காமல் அவற்றிலுள்ள உண்மைத் தத்துவங்களை ஏற்க வேண்டியதும் அவசியமாகும்..." என்று எழுதியுள்ளீர்கள். இந்த வாசகங்கள் அனைத்தும் ஏற்கனவே பதினெண்சித்தர்களின் வாக்குகளிலும், வாக்கியங்களிலும், வாசகங்களிலும், பாரம்பரியங்களிலும் மற்றுமுள்ள 27 வண்ண இலக்கியங்களிலும் நிறைந்து கிடைக்கின்றன, நிறைந்து கிடைக்கின்றன, நிறைந்து கிடைக்கின்றன. அதாவது, யாம் கீழே குறிப்பிடுகின்ற ஒருசில கருத்துக்களை, ஒருசில முறை திருப்பித் திருப்பிப் படித்துச் சிந்திப்பீர்களேயானால் உங்களுடைய உள்ளத்துக்குள் சித்தர்நெறிப் பேருண்மை இருக்கிறது என்பதைப் புரிந்து உடனே நீங்களே குருதிவண்ணச் சிவப்பு சன்னிதான உடைகளை அணிந்து இடக்கையில் திரிசூலமும், மெய்ஞ்ஞானக்கொடியும் பிடித்து, வலக்கையில் மயில்பீலி ஏந்தி எங்களுடைய குருதேவரின் அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரராக மாறி மக்களைச் சந்திக்கப் புறப்பட்டு விடுவீர்கள். இது தவிர்க்க முடியாத செயல்நிலையாகும்.

a) **மெய்யான இந்துமதம்** என்கின்ற சித்தர்நெறி 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைக்கவே விரும்புகிறது, முயலுகிறது.

b) அனைத்தையும் அற வழியில், அன்பு வழியில், அமைதி வழியில், சமாதான முறையில்தான் சாதிக்க வேண்டும்! சாதிக்க வேண்டும்! சாதிக்க வேண்டும்!

c) 'அச்சுறுத்தியோ, இச்சகம் பேசியோ சாதிக்கப்படக் கூடிய சாதனைகள் நிலைத்து நிற்கவும் மாட்டா, நிலையானப் பயனை நல்கவும் மாட்டா' என்பதே பதினெண்சித்தர்களின் செயல்நிலைச் சித்தாந்தம்.

d) 'மெய்யான மதவாதி எதையும் குறைத்தோ, அன்றி மறைத்தோ; யாரையும் வெறுத்தோ, அன்றி மறைத்தோ, அன்றி புறக்கணித்தோ ... செயல்படவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது' என்பதுதான் **மெய்யான இந்துமதம்** உருவாக்கும் சித்தர்நெறிச் செல்வர் பற்றிய விளக்கம்.

e) 'எதையும் இயற்கையோடு இயைந்த ஒன்றாக, இணைந்த ஒன்றாக, இரண்டறக் கலந்த ஒன்றாக உருவாக்கிச் செயல்படுத்தினால்தான் மனிதருக்குரிய ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றையும் ஒன்றாக்க முடியும். அதுவே காயகல்ப நிலை அல்லது பிறவா நிலை அல்லது இறவா நிலை அல்லது பேரின்பநிலை எனப்படும்'. எனவே, அனைத்தையும் இயற்கையை அடிப்படையாகக் கொண்டே எண்ணியும் உணர்ந்தும் செயல்படுபவனே சிறந்த சித்தர்நெறிச் செல்வனாக வளர முடியும்.

f) பதினெண்சித்தர்களுடைய **மெய்யான இந்துமதம்** என்கின்ற சித்தர்நெறி மனிதவாழ்வை முறைபடுத்தி, நெறிப்படுத்தி, பண்படுத்தித் தருகின்ற ஒரு சமூக விஞ்ஞானமாகும் (A Social Science).

எனவேதான், பதினெண்சித்தர்கள் அனைத்து வகையான பழக்க வழக்கங்களையும் (The Customs and Manners), நம்பிக்கைகளையும் (Beliefs and Faiths), கொள்கைகளையும் (The Policies and Principles), குறிக்கோள்களையும் (The Aims), செயல்நிலைகளையும் (The Positions of the Means and Methods), சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் (The Law and Order), நெறிமுறைகளையும் (The Rules and Regulations), சடங்குகளையும் (The Rituals and Offerings), விழாக்களையும் (The Festivals), ... முழுக்க முழுக்க பகுத்தறிவுப் போக்கும், விஞ்ஞானச் சூழலும் (The Pathinen Siddhars founded their Induism with a rationalistic approach and in a Scientific atmosphere. So, the theoretical and the practical steps of the Induism are full of sensible and useful values... - taken from the writings of His Holiness Siddhar Kaakkaiyar Mr M.Palanisamy Pillai, the respected second president of IMI) உடையவையாகவே உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதனால்தான் இந்துமதத்தின் ஒவ்வொரு தத்துவமும், செயல்சித்தாந்தமும் அறிவியல் பூர்வமானதாகவும், வாழ்வியலுக்குப் பயனுடையதாகவும் இருக்கின்றன.

(4) பேரன்புடையீர்! மேலே குறித்துள்ள ஆறு கருத்துக்கள் சித்தர்நெறி பற்றிய தங்களின் கனவுநிலைகளையும் நனவுகளையும் நன்கு விளக்கிடும் என்று நம்புகிறோம். விரிவஞ்சி இதற்குமேல் எழுத விரும்பவில்லை நான். என்னோடு நேரில் ஒரு குறிப்பிட்ட நேரம் உரையாடினாலேயே போதும் இன்னும் நிறைய தெரிந்து கொள்ளலாம். எங்களுடைய குருதேவர் திருவாய் மலர்ந்து அருளவோ, அருட்கரம் நீட்டி உண்மைகளை உணர்த்தவோ அவசியமே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! என்னைப் போன்று எண்ணற்ற படித்த, படிக்கின்ற, படிக்காத இளைஞர்கள் (ஆண், பெண் இருபாலரும்) குருதேவரின் பதிலியாக, வாரிசாக, அடியாராக அனைத்தையும்

தத்துவ வடிவமாகவோ அன்றி செயல்நிலைச் சித்தாந்த வடிவமாகவோ வழங்கிட உள்ளார்கள்! உள்ளார்கள்!! உள்ளார்கள்!!!

ஆனால், எங்களது குருதேவர் ஆடம்பரங்களையோ, ஆரவாரங்களையோ, விரைந்த விரிந்த வளர்ச்சிகளையோ விரும்பவில்லை என்பதால்தான் நாங்கள் பரபரப்பான நகரங்களையெல்லாம் விட்டுவிட்டு கிராமம் கிராமமாகச் சென்று அருளுலகப் பேருண்மைகளை அநுபவப் பொருளாக இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்குகிறோம், வழங்குகிறோம். நாங்களே எதிர்பாராமல்தான் நீங்கள் எங்களுக்கு அறிமுகமாகி யிருக்கிறீர்கள். உங்களை இழக்க விரும்பாமல்தான் இவ்வளவு பெரிய நெடிய அஞ்சலை எழுதுகிறேன் நான்.

**சிறப்புக் குறிப்பு**:- குருதேவரோ அவரது அடியவராகிய நாங்களோ எழுதும் அஞ்சல்கள் அனைத்தும் இலக்கியங்களாக அச்சிட்டு வெளியிடும் தகுதியுடையனவையே. எனவே, இந்த அஞ்சல், இதுவரை என்னைப் போன்ற அடியான்கள் எழுதிய அஞ்சல்கள் முதலியவற்றை ஒன்றுதிரட்டி **'இன்றைய இந்துமத நிலை'** என்ற தலைப்பில் நீங்களே ஒரு நூலாக வெளியிடலாம்! ஏனென்றால், அண்ணல் மகாத்மா காந்தியடிகள் இந்துமத செழிச்சிப் பணியின் மூலம்தான் இந்திய மக்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்கினார். தாங்கள் முதல் முயற்சியாக தமிழக மக்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்குங்கள். அதற்கு இந்து மறுமலர்ச்சி இயக்கம்தான் வழிகாட்டியாக, வழித்துணையாக, வழியாக, வழிப்பயனாக இருக்க முடியும்! முடியும்! முடியும்!. எனவே பொருளாதார வசதிவாய்ப்புப் படைத்த தாங்கள் எங்களுடைய ஒருசில தலைமை நிறுவனங்களுக்காவது நேரில் சென்று பார்த்தும்; எங்களுடைய ஒரு சிலரையாவது நேரில் சந்தித்தும் சிந்தித்தும் செயல்படும்படி கேட்டுக் கொள்கிறேன்.

5) ஐயா! மேலும் தாங்கள் தங்கள் அஞ்சலில், "... இந்துமதம் சகிப்புத் தன்மையுடையது மட்டுமன்று; மற்ற மதங்களில் காணும் உண்மைகளே, புதுமைகளேயெல்லாம் ஏற்கும் மதமாக, கடலாக இந்துமதம் உள்ளது. இதனுல்தான், மற்ற மதங்களே, இனங்களே, மொழிகளே வேறுபடுத்திப் பார்க்காமல் அணேத்துக் கொள்ளும் மதமாக பழைய புதிய கருத்துக்கள் காலத்திற்கேற்ப ஏற்கும் மதமாக உள்ளது இந்துமதம்...." என்று எழுதியிருக்கிறீர்கள். இந்த வாசகங்கள் உணர்த்தும் கருத்து உண்மையானது! சரியானது! மிகப்பெரியது! அரியது! சீரியது! உரியது! நாங்கள் அனேவரும் ஒப்புக் கொள்ளக் கூடியது. ஆனுல், நீங்கள் உங்களே அறியாமலேயே பதினெண்சித்தர்கள் படைத்த **மெய்யான இந்துமத**த்தின் மிகமிகப் பெரிய நுட்பமான, ஒட்பமான, திட்பமான வரலாற்றுப் பேருண்மையை ஓரளவு தொட்டிருக்கிறீர்கள். எனவே, அவற்றை விளக்கியுரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அதாவது, "இந்துமதம் என்கின்ற கடலிலிருந்து தத்துவ மேகங்கள் புறப்பட்டுப் பெய்த மழைதான் பல மதங்கள் எனும் ஆறுகளாக ஓடி மீண்டும் வந்து இந்துமதமெனும் கடலிலேயே கலக்கின்றன. அதாவது, கடலிலுள்ள நீரை பல்வேறு வடிவங்களேயும், சிறிய பெரிய அளவுகளேயும் உடைய பாத்திரங்களில் நிரப்பி வைத்துக்கொண்டு எந்தத் தண்ணீர் உயர்ந்தது, சிறந்தது என்று வாதிட்டால் எப்படி இருக்குமோ? அதுபோலத்தான் இன்றுள்ள மதச் சண்டைகள்..." என்ற குருபாரம்பரிய வாசகங்களே மட்டும் உங்களுடைய கருத்துக்கு விளக்கமாகவும், சித்தர்நெறியின் மதச் சகிப்புத் தன்மைக்குச் சான்ருகவும் வழங்குகிறேன். இவை போன்றுள்ள ஆயிரமாயிரம் கருத்துக்களே பொருளாழமிக்க அழகான சித்தர்நெறி இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அச்சிட்டு வழங்கினுல் போதும். அதுவே சாதிமத வெறிகளேயும், போட்டி பொருமைகளேயும், சண்டை சச்சரவுகளேயும்,

பேதங்களையும் முழுமையாகத் தடுத்து அகற்றிச் சமத்துவச் சகோதரத் தத்துவத்தையும், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்கிடும்.

6) ஐயா! இந்த உலகத்தில் தோன்றிட்ட அனைத்து மதங்களின் மூலக் கோயில்களும் பதினெண்சித்தர்களால்தான் கட்டப்பட்டவை. ('... The Original temples or the First Temple of all the Religions are only founded by the Pathinensiddhars. Since they can alone choose or select the correct place or appropriate place, namely THE SPRING OF THE DIVINE ATOMS to erect a temple....' / - taken from the writings of His Holiness Siddhar Kaakkaiyar Mr M.Palanisamy Pillai). ஏனென்றால், அவர்களுக்குத்தான் இந்த மண்ணுலகில் எந்தெந்த இடங்களில் அருட்சத்தியுடைய தெய்வீக அணுக்கள் ஊற்றெடுக்கின்றன என்பது தெரியும். அதனைக் கண்டுபிடித்தே அவர்கள் மேற்படி 'அருட்சத்தியுடைய தெய்வீக அணுக்களின் ஊற்றுக்களின் மீதே கருவறைகளை அமைத்து வழிபாட்டு நிலையங்களைக் கட்டினார்கள். இந்த வழிபாட்டு நிலையங்கள் ஆலயம், கோயில், திருப்பதி, பாழி, பீடம், மடம், அமளிகை, இருக்கை, கோட்டம், ... என்று 48 வகைப்படும்.

இந்த 48க்கும் உரிய ஒவ்வொரு கருவறையிலும் 48 வகையான வழிபடு நிலையினர்கள் கருவறை நாயகங்களாக அல்லது மூலவர்களாக நியமிக்கப்படுவதுதான் மரபு. மேற்படி வழிபடுநிலையினர்கள் ஆண்டவன், இயவுள், இறை, பட்டவர், கடவுள், தேவர், தேவியர், தேவதை, அமரர், கணபாடி, ... என்று 48 வகைப்படுவர். இப்படிப் பதினெண்சித்தர்கள் அருளுலகை (The Divine World) மிகவும் நுட்பமும் (minute), திட்பமும் (definite), வரையறையும் (finite) ... ஒழுங்கான அமைப்பும் (an orderly or a systematic form) உடையதாக வகுத்துள்ளார்கள்.

எனவேதான், தங்கள் கடிதத்தில் கூறியிருப்பது போல் பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதத்தை** எவராலும் அழித்தொழிக்க முடியவில்லை, முடியவில்லை, முடியவில்லை, அழித்தொழிக்கவும் முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! ஏனெனில், அனைத்து மதங்களும் இந்துமதத்தில் இருந்துதான் தோன்றின. அனைத்து மத மூலவர்களும் இந்துமதம் என்கின்ற ஆலமரத்தின் விழுதுகளேயாவார்கள். எனவே, அனைத்து மதங்களும் இந்துமதம் என்கின்ற பெரிய வற்றாத புதுப்புனல் மிக்க ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் கிளை ஆறுகளேயாகும். எனவே, இந்துமதம் எந்த மதத்தோடும் சண்டை போடவே தேவையில்லை! அவசியமில்லை!

இதேபோல், வேறு எந்த மதமும் இந்துமதத்தோடு போர் புரிய வேண்டிய உண்மையான காரணகாரியம் ஏதும் இல்லை. வரலாற்றுப் போக்கில் தோன்றிய ஒருசில தனிமனிதர்களே அந்தந்தக் காலச்சூழலுக்கும், வாழ்க்கை வசதிகளுக்கும் ஏற்ப தன்னலத்தின் காரணமாகவே இந்துமதத்தோடு சண்டையிட்டிருக்கிறார்கள். இப்பேருண்மைகளையெல்லாம் விளக்கியுரைப்பதன் மூலம்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் அனைத்து மதங்களின் ஒற்றுமைக்கும், சமத்துவத்திற்கும், இணைப்பிற்கும், ஒருமைப்பாட்டிற்கும் உழைக்கின்றது, முனைந்து பாடுபடுகின்றது.

எனவே, **இந்து மறுமலர்ச்சி இயக்கம் மூலம்தான்** இந்தியத் துணைக்கண்டத்தின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும், சமத்துவமும், சகோதரத் தத்துவமும், அமைதியும் விளைவித்திட முடியும். மேற்படி நல்லன அனைத்தையும் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்கள் என்ற விளைநிலத்தில் நாற்றுக்களாக நட்டுப் பயிர் செய்வதற்காகத்தான் தமிழ் மாநிலத்தை நாற்றங்காலாக ஆக்கியிருக்கிறோம். அதாவது, பதினெண்சித்தர்கள் போதனைகள் எனப்படும் அருளுரைகள், அறிவுரைகள், அருளார்ந்த அறிவுரைகள், அறிவார்ந்த அருளுரைகள்

எனும் நான்கும் வரலாற்று அறிவு என்கின்ற வேலிக்குட்பட்டும்; இலக்கிய வளம் என்கின்ற உரத்தின் துணையைப் பெற்றும் நாற்றங்கால் பயிராகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை **தமிழகத்தில் நன்கு செழித்து வளர்ந்து சாதனை புரிவதைப் பொறுத்துத்தான் இந்தியத் துணைக்கண்டமும், ஆசியா கண்டத்து மக்களும், உலக மக்களும் ஆன்மீகத் துறை! அல்லது அருட் துறை! அல்லது மதத் துறை! அல்லது தெய்வீகச் சத்தி!... மனித வாழ்வுக்குத் தேவையா? இல்லையா? என்பதை முடிவு கட்ட வேண்டும்.**

எனவே, தங்களைப் போன்ற பெரியவர்கள் முழுமூச்சாக எல்லாவகையான ஆதரவுகளையும், ஏந்துகளையும், உறுதுணைகளையும் உடனுக்குடன் எங்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அப்பொழுதுதான் நீங்கள் தமிழ் மாநிலம், தென்னாடு, இந்தியத் துணைக்கண்டம், ஆசியாக் கண்டம், உலகம் என்று படிப்படியாக 'உலக ஆன்மநேய ஒருமைப்பாடு', 'உலக அமைதி', 'உலக ஒற்றுமை', 'உலக ஒருமைப்பாடு', 'உலகச் சமத்துவம்', 'உலகச் சகோதரத் தத்துவம்', 'உலகப் பொதுவுடமை', 'உலகக் கூட்டுறவு', 'உலக நல்குரவு', 'உலகச் சமாதானம்', 'உலக ஐக்கிய பொது அரசாங்கம்', 'உலக இருளனைத்தும் அகற்றும் அருளாட்சி' ... முதலிய அனைத்தும் உருவாகிட உண்மையிலேயே பாடுபட்டவராக ஆவீர்கள்! ஆவீர்கள்! ஆவீர்கள்! அன்புகூர்ந்து இந்த அஞ்சலைப் படித்துப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள்.

7) ஐயா! இன்றுள்ள மதவாதிகளும், நாத்திகர்களும், அப்பாவி மக்களும், ... எங்களைப் பூசாறிகளாக, குறிகாரர்களாக, மந்திறவாதிகளாக, மதவெறியர்களாக ... நோக்குகிறார்களே தவிர எங்களைத் தத்துவத்தின் தலைவர்களாகவோ, சித்தாந்தத்தின் வாரிசுகளாகவோ நோக்கவோ, ஏற்கவோ மறுக்கிறார்கள்! மறக்கிறார்கள்! மேலும் அரசியல்வாதிகளும், கலையுலகவாதிகளும், ... எங்களுடைய வளர்ச்சி முதிர்ச்சியின் விளைச்சல்

எப்படியெப்படி எல்லாம் இருக்கும் என்பதைக் கணிசமான அளவு ஊகித்துணர்ந்துதான் எங்களை இருட்டடிப்புச் செய்ய முயலுகிறார்கள்! முயலுகிறார்கள்! முயலுகிறார்கள்! ஆனால், காலைக் கதிரவனின் முன்னால் காரிருள் மெல்ல மெல்ல விலகுவது போல்; எங்களுடைய குருதேவரின் கருத்துக்களால் அனைத்துத் துறைகளில் உள்ள அனைத்து வகையினர்களுக்கும் எங்களைப் பற்றிய அச்சங்களும், கூச்சங்களும், ஐயங்களும், ஆச்சரியங்களும், மாச்சரியங்களும் முறையாக மெல்ல மெல்ல அகன்று வருகின்றன. எனவே, நாங்கள் முறையான, நிறைவான, பயனுள்ள வெற்றிகளைப் பெற்றே தீருவோம்! தீருவோம்! தீருவோம்!

தங்களைப் போன்ற பொதுநல ஊழியர்கள், மனிதாபிமான உணர்வுள்ளவர்கள், தொண்டு மனமுடையவர்கள் எங்களோடு துணையாகச் செயல்பட்டால் நல்லது என்று கருதுகிறோம். மற்றபடி தங்கள் விருப்பம்போல் செய்யலாம். எனவே, எங்களது குருதேவர் அருளுரையாற்றப் பத்தர்கள் கூட்டத்திலும், அறிவுரையாற்ற கல்வி நிலையங்களிலும், அருளார்ந்த அறிவுரையாற்ற கோயில்களிலும், அறிவார்ந்த அருளுரையாற்ற இலக்கியக் கழகங்களிலும் வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதை ஒன்றைத்தான் தங்களிடம் எதிர்பார்க்கின்றேன். நன்றி! இதுபற்றி தங்களின் பதிலை வேண்டுகின்றேன்.

அன்பு

**தொட்டியம் மருதக்காளி சன்னிதானம்,**
**சித்தரடியான் பெ.சௌந்தரராசன் B.E.**

**//உண்மை நகல்//**

<u>நகல்</u>: குருவின் பதிலி சீ.மணி.

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# தெய்வீக மருத்துவம் (Mystical Treatment)

சித்த மருத்துவத்தில் 'மணி - மந்திரம் - மருந்து' என்ற மூன்று பெரும் பிரிவுகள் உண்டு.

(1) மணி (Light Rays) என்பது 'ஒளிக் கற்றை'களைப் பயன்படுத்திச் செய்யப்படும் மருத்துவம்.
(2) மந்திரம் (Sound Waves) என்பது 'ஒலி அலை'களைப் பயன்படுத்திச் செய்யப்படும் மருத்துவம்.
(3) மருந்து (Medicine) என்பது பச்சிலை மூலிகை, மண், உப்பு, இரசம் முதலிய பிறவற்றைக் கொண்டு செய்யப்படும் மருத்துவம்.

இதில் முதலிரண்டும் சேர்ந்ததே 'தெய்வீக மருத்துவம்'. முதலில் இந்த இரு (மணி-மந்திரம்) முறைகளால்தான் ஒரு நோயாளிக்கு மருத்துவம் பார்க்கப்படும். இவற்றுல் நலமடையாத நோயாளிகளுக்குத்தான் மருந்து கொடுக்கப்படும். ஆனுல் பல்வேறு மதக் கலப்பாலும், அரசியல் மாற்றங்களாலும், தெளிவற்ற விஞ்ஞானப் பற்றுலும், தெய்வநம்பிக்கை குறைவாலும், தகுதியும் திறமையும் மிக்க சித்த மருத்துவர்கள் குறைந்ததாலும் இந்த தெய்வீக மருத்துவம் நாளடைவில் குறைந்து மறைந்தது.

<u>சித்த மருத்துவத்தின் மூன்றில் இரண்டு பங்கான தெய்வீக மருத்துவத்தை</u> முறைப்படி ஆராய வேண்டும். இல்லாவிடில் இது அழிந்து விடும். தெய்வீக மருத்துவத்தை இழந்தால் சித்த மருத்துவம் முழுமையற்றதாகி விடும். பிறகு குறைபாடுடைய சித்த மருத்துவத்தால் மக்களின் குறைகளை அகற்ற முடியாது. **தெய்வீக மருத்துவத்தால் மனித சமுதாயத்தின் துன்பமெனும் இரவுக்கு இன்பமெனும் விடிவு ஏற்படும்!**

**//1969 மே மாதம் "முதல் சித்தன்" எனும் சித்த மருத்துவ மாத இதழில் அச்சாகிய குருதேவரின் கட்டுரையின் பகுதிகள்.//**

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** (கி.பி.785 - 1040) ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் தமது முன்னோர்கள் படைத்திட்ட அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களும் வற்றாத அருள் ஊற்றுக்களாக இருந்தும் பாழ்பட்டுப் போய்விட்டன என்று வருந்தி இரு பெரும் அருளூற்றுக்களைப் படைத்தார். அவற்றிற்காக பொதியமலை குகைக்குள் பன்னெடுங்காலமாக இருந்திட்ட சத்தி இலிங்கம், சிவ இலிங்கம் என்ற இரண்டையும் முதல் விசயாலயன் தலைமையில் கொண்டு வந்து; தஞ்சாவூரிலும், சோழபுரத்திலும் நிறுவினார்.



அம்மையப்பர்

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org

*Email:* indhuism@gmail.com